
தினமணி நாமக்கல் மலர்

# ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்கப் போராட்டம்

## சுவர் இடிக்கப்பட்டதால் பரபரப்பு



திருச்செங்கோடு,ஏப். 30: திருச்செங்கோடு அருகே ஒரு சமூகத்துக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் இடத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளதாகக் கூறி அந்நிலத்தை மீட்கப் போராட்டம் நடத்தப்பட்டது.

திடீரென ஆக்கிரமிப்புச் சுவர் இடிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

திருச்செங்கோட்டை அடுத்த கொசவம்பாளையம் பகுதியில் ஒரு சமூகத்துக்குப் பாத்தியப்பட்டதாகக் கூறப்படும் நிலத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளதாகவும். ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு தனது பெயரில் பட்டா பெற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. அந்த இடத்தை மீட்டுக் கொடுக்கும்படி கொசவம்பாளையம் பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட சமூக மக்கள் கடந்த பல ஆண்டுகளாகப் போராடி வந்தனர்.

இதுவரை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் பிரச்சினைக்குரிய இடத்தை மீட்கப் போராட்டம் நடத்தப் போவதாக ஆதித் தமிழர் பேரவையினர் அறிவித்திருந்தனர். திங்கள்கிழமை காலை 11 மணிக்கு நிலம் மீட்புப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, மேற்கண்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் காலை 8.30 மணிக்கு திடீரென பிரச்சினைக்குரிய பகுதியில் கட்டப்பட்டிருந்த சுற்றுச் சுவரை இடித்தனர் (படம்).

இதனால், அப்பகுதியில் டிஎஸ்பி சுஜாதா தலைமையில் போலீஸார் குவிக்கப்பட்டனர். பிரச்சினைக்குறிய பகுதியை மீட்டு, அப்பகுதியில் கழிப்பிடம் கட்ட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேற்கண்ட கோரிக்கைக்காக கொசவம்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். இது குறித்து, தகவலறிந்த திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் கவிதா, வட்டாட்சியர் (பொ) நடேசன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரச்னைக்குரிய இடம் குறித்து ஆவணங்களைச் சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டாட்சியர் உறுதியளித்ததின் பேரில் பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

தினமலர். நாமக்கல் 01.05.2012


### திருச்செங்கோடு அருகே

# ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்க போராட்டம்

திருச்செங்கோடு,மே.1-

திருச்செங்கோட்டை அடுத்துள்ள கொசவம் பாளையம் பகுதியில் ஒரு சமூகத்திற்கு பாத்தியப் பட்டதாக கூறப்படும் நிலத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளதாகவும். ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு தனது பெயரில் பட்டா பெற்றுக் கொண்டதாகவும். அந்த இடத்தை மீட்டு கொடுக்கும்படியும் கொசவம் பாளையம் பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட சமூக மக்கள் கடந்த பல வருடங்களாகபோராடிவந்தனர்.

இந்நிலையில் நேற்று காலை 11 மணிக்கு நிலம் மீட்புபோராட்டம்நடத்தப் படும்எனஅறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால்மேற்கண்ட பகுதியைச்சேர்ந்த பொது மக்கள்காலை8.30மணிக்கு திடீரெனபிரச்சனைக்குறிய பகுதியில்கட்டப்பட்டிருந்த காம்ப வுண்ட் சுவரினை இடித்தனர். இதனால் அப்பகுதியில் டிஎஸ்பி சுஜாதா தலைமையில் ஐம்பதிற்கும் மேற் பட்ட போலீசார்குவிக்கப்பட்டனர். பிரச்சனைக்குறிய பகுதியைமீட்டுஅப்பகுதியில் கழிவறை கட்ட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தினர்.மேற்கண்ட கோரிக்கையைவலியுறுத்திகொசவம்பாளையம்பஸ்ஸ்டாப் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர்.



கொசவம்பாளையம் பகுதியில்மறியலில் ஈடுபட்ட பொது மக்களிடம் ஆர்டிஓ கவிதா பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதுகுறித்துதகவலறிந்த திருச்செங்கோடு ஆர்டிஓ கவிதா, தாசில் தார்(பொ) நடேசன்ஆகியோர்சம்பவ இடத்திற்குவிரைந்துவந்து மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.பிரச்சனைக்குறியஇடம் குறித்து ஆவணங்களை சரிபார்த்து உரிய நடவடிக்கைஎடுக்கப்படும்என ஆர்டிஓ கவிதா உறுதியளித்ததின் பேரில் பொது மக்கள்கலைந்துசென்றனர்.

தினகரன் நாமக்கல்

# நிலத்தை மீட்க கோரி சுவர் இடிப்பு

**போலீஸ் குவிப்பால் பதற்றம்**

திருச்செங்கோடு, மே 1 :திருச்செங்கோடு அருகே ஒரு சமூகத்திற்கு சொந்தமானதாக கூறப்படும் இடத்தை தனியார் ஆக்கிரமித்துள்ளதாக கூறி சுற்று சுவரை இடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

போலீஸ் குவிக்கப்பட்டதால் பதட்டம் நிலவியது. திருச்செங்கோடு அடுத்துள்ள கொசவம்பாளையம் பகுதியில் ஒரு சமூகத்திற்கு பாத்தியப்பட்டதாக கூறப்படும் நிலத்தை தனியார் ஆக்கிரமித்து தனது பெயரில் பட்டா செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அந்த இடத்தை மீட்டு கொடுக்கும்படி கொசவம்பாளையம் பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட சமூக மக்கள் கடந்த பல வருடங்களாக அதிகாரிகளுக்கு மனு அளித்துள்ளனர். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத தால் பிரச்னைக்குரிய இடத்தை மீட்க போராட்டம் நடத்தப்போவதாக ஆதித்தமிழர் பேரவையினர் அறிவித்திருந்தனர். அதன்படி நேற்று காலை 11 மணிக்கு நிலம் மீட்பு போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலை 8.30 மணிக்கே சிலர் திடீரென வந்து பிரச்னைக்குரிய பகுதியில் கட்டப்பட்டிருந்த சுற்றுச்சுவரை இடித்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இதையறிந்து டிஎஸ்பி சுஜாதா சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார். சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் தடுக்க அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. அப்போது பிரச்னைக்குரிய நிலத்தை மீட்டு அதில் கழிப்பிடம் கட்ட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் வலியுறுத்தினர். இதனைத்தொடர்ந்து மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி கொசவம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே சாலைமறியலில் ஈடுபட்டனர். இது குறித்து தகவலறிந்த திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் கவிதா, வட்டாட்சியர் (பொ) நடேசன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும் பிரச்னைக்குரிய இடம் குறித்து ஆவணங்களை சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டாட்சியர் கவிதா உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து மறியல் செய்தவர்கள் கலைந்து





திருச்செங்கோடு அருகே உள்ள கொசவம்பாளையத்தில் ஆதித்தமிழர் பேரவை போராட்டத்தால் இடிக்கப்பட்ட சுற்றுச்சுவர் மற்றும் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்ட போலீசார்.